பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 05 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான புதிய இணையதளம், மேம்படுத்தப்பட்ட அம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், வேளாண் ஆராய்ச்சிக் கழகங்களின் இயக்குநர்களின் மாநாட்டை மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

3. வடகிழக்கு மாநிலங்களின் நீர்வழிப் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அரசு நிறைவேற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

4. யுக்ரைனுடன் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்த ரஷ்யா தயாராக உள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான புதிய இணையதளம், மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் மற்றும் செயல்பாடுகளுடன் அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த இணையதளம் தொடர்பான உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவின் சமூக வலைதளப் பதிவை பிரதமர் தமது பதிவில் பகிர்ந்துள்ளார்.

புதிதாக தொடங்கி வைக்கப்பட்டுள்ள இந்த இணையதளம் நாட்டு மக்களுக்கு உகந்த டிஜிட்டல் நிர்வாகத்தை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக அமைந்துள்ளது என்று பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஜனநாயகம் மலர்வதற்கும், உயிர்ப்புடன் இருப்பதற்கும் வலுவான நீதித்துறை அமைப்பு அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய அவர், உலக அளவில் விசாரணை என்பது நிர்வாகத்தின் ஒரு களமாக திகழ்கிறது என்று கூறினார்.

விசாரணை மீதான தீர்ப்பு நீதித்துறையின் களம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் நீதித்துறையை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்ட திரு. ஜக்தீப் தங்கர், நீதிபதிகள் அச்சமின்றி முடிவெடுப்பதால் அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

<<<<>>>>

வேளாண் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகங்களின் இயக்குநர்களின் ஆண்டு மாநாட்டை மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

வளர்ந்த பாரதத்திற்கான வேளாண் ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத்தை வடிவமைத்தல் என்ற கருப்பொருளுடன் இந்த மாநாடு நடைபெற உள்ளது.

நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கான தேசிய வேளாண் ஆராய்ச்சி திட்டத்தை மறு வடிவமைப்பதற்கான உயர்நிலைக் குழுக் கூட்டத்திற்கும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தலைமை வகிக்க உள்ளார்.

வேளாண்துறை நிபுணர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் இந்தத் துறையின் பல்வேறு வல்லுநர்கள் மாநாட்டில் பங்கேற்று இந்தத் துறையில் புத்தாக்க நடைமுறைகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை தெரிவிக்க உள்ளதாக வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டின் ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களிலும் நீர்வழிப் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு திட்டங்களை வகுத்துள்ளதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தமது துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் குறித்தும் அவற்றை விரைவுபடுத்துவது குறித்து உயரதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின் அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முன்னோடி திட்டமான அசாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நீர்வழிக் கட்டமைப்பை விரைவுபடுத்தும் திட்டத்தின்கீழ் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இந்தத் திட்டத்தை வரும் 2026ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஏற்கனவே 300 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நிறைவடைந்திருப்பதாக திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

நெதர்லாந்து சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Ruben Brekelmans,** வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Casper Veldkamp** ஆகியோரை சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு தொடர்பான அம்சங்கள் மற்றும் சவால்கள் குறித்து கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறையில் இரு நாடுகளின் கூட்டுறவால் ஏற்படும் பலன்கள் குறித்தும் தாம் பேச்சு நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பஹல்காம் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததற்காக நெதர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சரிடம் தமது நன்றியை தெரிவித்துக்கொண்டதாகவும், தீவிரவாதத்திற்கு எதிரான ஆதரவுக்கு பாராட்டு தெரிவித்ததாகவும் திரு. ஜெய்சங்கர் அதில் கூறியுள்ளார்.

தொடர்ந்து நெதர்லாந்தில் உள்ள இந்திய சமூகத்தினரையும் சந்தித்து தாம் கலந்துரையாடியதாக திரு. ஜெய்சங்கர் மற்றொரு பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் குஜராத் மாநிலத்தில் உள்ள சூரத்கர் ராணுவத் தளம் மற்றும் நாலியா விமானப்படை தளத்திற்கு சென்று பாதுகாப்புப் படையினருடன் கலந்துரையாடினார்.

பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இந்த ராணுவத் தளங்களில் ஆயுதப் படையினரின் மன உறுதியை அதிகரிக்கும் வகையில் அவருடைய இந்தப் பயணம் அமைந்துள்ளது.

அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் செயல்பாட்டு தயார்நிலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பாதுகாப்புப் படையினருடன் ஜெனரல் அனில் சௌஹான் கலந்துரையாடினார்.

அவருடன் தென்மேற்கு மண்டல ராணுவ தளபதி லெப்டினெண்ட் ஜெனரல் மன்ஜிந்தர் சிங், தென்மேற்கு விமானப் படைத் தளபதி ஏர்மார்ஷல் நாகேஷ் கபூர் ஆகியோரும் சென்றிருந்தனர்.

<<<<>>>>

யுக்ரைனுடன் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்த ரஷ்யா தயாராக உள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினுடன் திரு. ட்ரம்ப் நேற்று இரண்டு மணி நேரம் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

தமது உரையாடல் குறித்து திரு. ட்ரம்ப், வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சண்டை நிறுத்தத்தம் ஏற்பட ரஷ்யா – யுக்ரைன் நேரடிப் பேச்சுவார்த்தையை தொடங்க உள்ளதாக கூறினார்.

இதன் மூலம் விரைவில் இரு நாடுகளுக்கும் இடையேயான சண்டை முடிவுக்கு வருவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும், அமைதி சூழல் விரைவில் ஏற்படும் என்று தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையே அமைதி ஏற்பட்ட பின்னர் அமெரிக்காவுடன் முக்கிய வர்த்தக ஒப்பந்தங்களில் ஈடுபட ரஷ்யா விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் திரு. ட்ரம்ப் கூறினார்.

தமது இந்த உரையாடல் குறித்து யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி மற்றும் பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களிடம் எடுத்துரைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே ரஷ்யாவுடன் அமைதிப் பேச்சுகளை நடத்துவதற்கு யுக்ரைன் தயாராக உள்ளது என்று அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உணவு, பாதுகாப்பு, மீன்பிடி உரிமை உள்ளிட்டவற்றில் பிரிட்டனும், ஐரோப்பிய யூனியனும் ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வந்துள்ளன.

லண்டனில் இரு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற உச்சிமாநாட்டில் புதிய ஒப்பந்தம் தொடர்பான அறிவிப்பு வெளியானது.

இதன்மூலம் பாதுகாப்புத்துறையில் புதிய பங்களிப்பை வழங்க வழிவகை ஏற்படும் என்று பிரிட்டன் அரசு வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

புதிய ஒப்பந்தத்தின் மூலம் பிரிட்டனுக்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் இடையேயான உணவுப் பொருள் மற்றும் குளிர்பான ஏற்றுமதி, இறக்குமதி நடைமுறைகள் எளிதாகும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கஞ்சன்ஜங்கா மலை உச்சியை இந்திய – நேபாள ராணுவக் குழுவினர் வெற்றிகரமாக சென்றடைந்துள்ளனர்.

இந்தியா – நேபாள ராணுவ மலையேற்றக் கூட்டுக் குழுவினரின் பயிற்சியின் ஒரு பகுதியாக அவர்கள் உலகின் மூன்றாவது மலை உச்சியான இந்தப் பகுதியை அடைந்திருப்பதாக ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரு நாடுகளுக்கிடையேயான ராணுவ ஒத்துழைப்பை வலியுறுத்தும் வகையில் அந்நாட்டு ராணுவ மலையேற்றக் குழுவினர் இந்திய ராணுவக் குழுவினருடன் இணைந்து இந்த பயிற்சியில் ஈடுபட்டதாகவும் அதிகாரிகள் மேலும் கூறினர்.

<<<<>>>>

கர்நாடகத்தில் அடுத்த 2 நாட்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ள தமிழகம், கொங்கன், கோவா மற்றும் மகாராஷ்டிர மாநிலப் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்றும், இந்தப் பகுதிகளில் சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

மும்பையில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 205 ரன் எடுத்தது.

206 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹைதராபாத் அணி, 18 புள்ளி 2 ஓவரிலேயே 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

---------------

உலகக்கோப்பை டேபிள் டென்னிஸ் சாம்பியன் இறுதிப் போட்டியில் இந்தியாவின் **Yasashwini Gharpade – Diya Chitale** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தோஹாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-11, 11-6, 11-9 என்ற செட் கணக்கில் சிங்கப்பூரின் **Jian Zeng – Ling Qian** இணையை வென்றது.

-------------

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டி இன்று கோலாலம்பூரில் தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் **H.S.** பிரனாய், ஆயுஷ் ஷெட்டி, பி.வி. சிந்து, மால்விகா பன்சோட் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

வரும் 25ஆம் தேதி வரை இப்போட்டி நடைபெறுகிறது.

--------------

ஜெர்மனியின் **Suhl** நகரில் நேற்று தொடங்கிய உலகக்கோப்பை இளையோர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Raiza Dillon** தலைமையிலான 57 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

வரும் 26ஆம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெற உள்ளன.

------------

டொமினிக்கன் குடியரசில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரத்யுஷா, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**